1982 பிப்ரவரி 15]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக்குடிநீர் திட்டம் என்பது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக, அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களை நிவர்த்தி செய்வதற்காக போடப்படுகிற திட்டம். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திட்டங்களில் எல்லாம், எலக்ட்ரிக் பம்புதான் வைத்திருக்கிறார்கள். பவர்கட் வருகிற நேரத்தில், அல்லது மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நேரத்தில் அவைகள் இயங்குவது இல்லை. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் ஆயில் என்ஜின்கள் வைத்து தண்ணீர் இறைபதற்கான முறையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியை தனிப்பிரிவின்கீழ் கொண்டுவரும் திட்டம்

* வினா எண் 212 திருக் குமரி அனந்தன் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழாய்க்கிணறு அமைப்புப் பணியை தனியமைப்பாகப் பிரிக்கும் யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை "இல்லை,"

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட இடங்களில் சில சீராக இயங்காத காரணத்தினாலும், செப்பனிடப்படாத நிலையில் செம்மையாக நீர் இறைக்க முடியாத காரணத்தினாலும், அரசும் அமைச்சரும் எதிர்பார்க்கிற பலன்கள் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் தான் இதில் தனிப்பட்ட அக்கறை செலுத்துவதற்கு ஒரு தனி அமைப்பு வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆகவே, அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா மீண்டும் அதை பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்பைப் பற்றி ஒரு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட முடிவை எடுத்திருக்கிறோம்.

ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறுகள் அமைப்பது தேவையின் அடிப்படையில் விசை இறைப்பான்கள் அல்லது கை இறைப்பான்கள் பொருத்தி, அதன்பின் அவற்றைப் பராமரித்தல் ஆகிய பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுச் செய்து வந்தது. நடப்பு ஆண்டில் கை யிறைப்பான்கள் சம்பந்தப்பட்ட பராமரிப்பு பணிகளை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களே எடுத்து சேய்ய வேண்டு மென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவது போல் குழாய்க் கிணறுகள் அமைப்புப் பணியை தனியாகப் பிரித்துச் செய்வதாக இல்லை. தற்போது செய்யப்பட்டிருக்கிற மாற்றத்தை ஏற்றுக் கொண்டு, எப்படி நடைபெறுகிறது என்றும் பலன்களைப் பார்த்து அதன்பின் சிந்தித்துப் பார்க்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழாய்க் கிணறுகளை பராமரிக்கிற பணியை ஊராட்சி ஒன்றியங்களே ஏற்றிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பவர் பம்பை பராமரிப்பதைவிட குழாய்க் கிணறுகளைப் பராமரிப்பது தான் சிரமமாக உள்ளது. ஆகவே பவர் பம்ப் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குழாய்க் கிணறுகளின் பராமரிப்பை, குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் மாற்றுவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இப்படித்தான் குழாய்க் கிணறுகளை பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். கொடுத்து விட்டோம். இப்பொழுது மீண்டும் குடிநீர் வடிகால் வாரியம் அதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறர்ககன்.

If we go on dancing to their tunes- என்றால் அது எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய கருத்தை பரிசீலனை செய்து பார்க்கலாம்.

(முற்பகல் 9. 50)

திரு. இரெ. இராசமாணிக்கம்: ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடிநீர் குழாய்க் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படுகிற நேரத்தில் அவை சரியாக பராமரிக்கப் படவில்லையென்று அரசுக்கு பல புகார்கள் வந்திருக்கும். அப்படி சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கும் குழாய்க் கிணறுகள் அல்லது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை

1982 பிப்ரவரி 15]

ஊராட்சி ஒன்றியங்களே பராமரிக்க வேண்டும் என்று ஆணை யிடுவதோடு கூட அதற்காக ஒன்றிய அளவில் தனியாக அதிகாரிகளை நியமித்து தாமதமில்லாமல் உடனடியாக அந்தக் குழாய்க் கிணறுகளையெல்லாம் பராமரிக்க அரசு ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஊராட்சி ஒன்றிய அளவில் தனியாக பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்களை அமைப்பது பற்றிய விஷயங்களைப் பரிசீலனை செய்தது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆவார்கள். இந்த அமைச்சகம் அல்ல, இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பரிசீலனைக்குரிய விஷயங்கள் தான். பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் கருத்துக்களையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வைத்து முதல்வர் அவர்கள் எடுத்த முடிவிற்கேற்ப இப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எதிலும் மாற்றங்கள் கூடாது என்று சொல்லக் கூடாது எதிலும் மாறுவது உலகத்தில் இயற்கை. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து அவ்வப்போது தேவையான மாற்றங்கள் செய்வோம். அதுதான் எவல்யூஷன் என்பது.

குசஸ்தலி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 213— திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிப்பட்டு அருகாமையில் ஓடும் குசஸ்தலி ஆற்றில் நீர்த்தேக்க அணை கட்டும் திட்டம் அரசுக்குண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) பள்ளிப்பட்டு அருகாமையில் ஓடும் குசஸ்தலி ஆற்றில் புதிதாக நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் ஏற்கெனவே குசஸ்தலி ஆற்றில் ஆந்திர மாநில எல்லையில் பள்ளிப்பட்டு அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டு தமிழகத்தில் 538.98 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசனம் அளிக்கிறது. இந்த அணைக்கட்டு மற்றும் அதன் நீர் வழங்கு கால்வாய் சீரமைப்புக்காக ஆந்திர அரசின் ஒப்புதல் பெறப்பட்டு தமிழக அரசின் செலவில் இப்பணி களை ஆந்திர அரசு மேற்கொள்ள அவ்வரசு இசைவு அளித்துள் ளது. பணிகள் பற்றிய அமைப்புப் படம் மற்றும் மதிப்பீடுகள் ஆந்திர அரசுக்கு அனுப்ப தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.